# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.03.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை
## (திருத்தம்)

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** *இவ்வாசகம், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தில் 43ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன், திருத்தத்தின் சட்டப் பயனானது நீதிவானின் நீதிப் பிரிவினுள் உள்ள பொலிசு நிலையங்களின் கட்டுக்காப்பில் உள்ள சந்தேக நபர்கள் 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமாக, மனிதாபிமானமற்றதாக அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான, சமவாயச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்கு பாதுகாக்கப்படுகிறார்கள் என உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய பொலிசு நிலையங்களுக்கு விஜயம் செய்வதற்கு நீதிவான்கள்மீது கடமையொன்றையளிப்பதற்குமாகும்.*

# குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை
# (திருத்தம்)

*ச.வ.- ஓ 62/2017*

## 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 43ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**2.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தின் 43அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 43ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பொலிசு நிலையங்களுக்கு விஜயம் செய்வதற்கு நீதிவான் களுக்குள்ள கடமை.

43ஆ. (1) ஒவ்வொரு நீதிவானும் எந்த நீதிப்பிரிவு தொடர்பில் நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிப்பிரிவினுள் அமைந்துள்ள ஒவ்வொரு பொலிசு நிலையத்துக்கும், அத்தகைய பொலிசு நிலையங்களில் பொலிசுக் கட்டுக்காப்பின்கீழுள்ள சந்தேகநபர்கள் 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமாக, மனிதாபிமானமற்றதாக அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக் கெதிரான சமவாயச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவுக்குப் பாதுகாக்கப்படுவதனை உறுதிப் படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது ஒரு தடவையேனும் விஜயம் செய்வது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, பொலிசு நிலையத்துக்கு விஜயம் செய்கின்ற நீதிவான் -

(அ) சந்தேகநபரை நேரடியாகப் பார்வையிடுதல் வேண்டுமென்பதுடன் அவரது நல்வாழ்வு, சேமநலன் மற்றும் அத்தகைய பொலிசு நிலையத்தில் அவர் எந்த நிலைமைகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்றார் என்பவற்றைப் பரிசோதனை செய்தலும் வேண்டும்;

(ஆ) அவரது அவதானிப்புக்களையும் சந்தேகநபர் செய்யக்கூடிய ஏதேனும் முறைப்பாட்டையும் பதிதல் வேண்டும்.

(3) சந்தேகநபர் சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டிருக்கலாமென நீதிவான் அபிப்பிராயப்படுமிடத்து, சந்தேகநபர் மருத்துவப் பரிசோதனைக்காக சட்டமருத்துவ அலுவலரொருவரின் முன்னர் அல்லது ஓர் அரசாங்க மருத்துவ அலுவலரின் முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும் அத்தகைய மருத்துவ அலுவலரினால் அறிக்கையொன்று நீதிவானுக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டுமென்றும் நீதிவான் பணிக்கலாம்.

(4) சந்தேகநபர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென அத்தகைய மருத்துவ அலுவலரின் அறிக்கை வெளிக்காட்டுமிடத்து, சந்தேகநபருக்கு அவசியமான மருத்துச் சிகிச்சையை அளிப்பதற்கும் அத்தகைய சந்தேகநபரின் கட்டுக்காப்பிடத்தை மாற்றுவதற்குமான பணிப்புகளுட்பட, நீதிவான் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) சித்திரவதை புரிந்தவரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு சட்டத்துறைத் தலைமையதிபதியை இயலச் செய்வதற்கெனச்

சார்த்தப்பட்ட சித்திரவதைபற்றி புலனாய்வொன்றை தொடங்கும்படி நீதிவான் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியை பணித்தலும் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.